**அமைச்சு சுற்றறிக்கை :** 06/2021

எனது இலக்கம்: SMRIP/ES/01/06/உள்ளக சுற்றறிக்கை
பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள்
மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு
இராஜாங்க அமைச்சு
07 ஆம் மாடி, மேற்கு கோபுரம்,
உலக வர்த்தக மத்திய நிலையம்,
கொழும்பு 01.
2021.06.28

அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,
அனைத்து மாவட்ட விதாதா உத்தியோகத்தர்கள்,
அனைத்து நிலையங்களுக்கும் பொறுப்பான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

**ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் கிராமியக் கைத்தொழில் முயற்சியாளர் ஒருவரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்**
**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

2021.02.25 ஆம் திகதிய அமைச்சு சுற்றறிக்கை 03/2021 மற்றும் அதன் திருத்தமான அமைச்சு சுற்றறிக்கை 03/2021 (i) இற்கு அமைய தெரிவு செய்யப்படும் பயனாளிகளை கைத்தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் பிரயோகப் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். அதற்காக தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல் கோவை (பின்இணைப்பு 01), ஆரம்ப பயிற்சித் திட்டம் (பின்இணைப்பு 02) மற்றும் கருத்திட்ட யோசனைப் பத்திரம் தயாரிப்பதற்கான வழிகாட்டல் (பின்இணைப்பு 03) ஆகியவற்றை இதனோடு சமர்ப்பிக்கின்றேன். அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் அறிவிக்கின்றேன்.

**எம்.ஏ.பீ.வீ.பண்டாரநாயக்க,**

செயலாளர்,
பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

பிரதிகள்:-
1) சனாதிபதியின் செயலாளர்
2) பிரதம அமைச்சரின் செயலாளர்
3) செயலாளர், நிதி அமைச்சு
4) செயலாளர், கைத்தொழில் அமைச்சு
5) செயலாளர், இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு
6) அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்
7) அனைத்து பிரதேசங்களினதும் அபிவிருத்திக் குழு தலைவர்கள்
8) செயலாளர், உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
9) செயலாளர், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பதற்கான சனாதிபதி செயலணி
10) கணக்காய்வாளர் நாயகம்,
11) பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திணைக்களம்
12) பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
13) பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
14) பணிப்பாளர் நாயகம், சமுர்தி அபிவிருத்தி திணைக்களம்
15) பணிப்பாளர், சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு, இளைஞர் மற்றும் வியைாட்டுத் துறை அமைச்சு
16) தலைவர், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை

**ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் கிராமியக் கைத்தொழில் முயற்சியாளர் ஒருவரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்**
**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டி**

01. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்கை விளக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச ரீதியாக உள்ள வளவாளர்களின் பங்களிகப்புடன் மற்றும் தேவையாயின் ஏனைய வளவாளர்களின் பங்களிப்புடன் நிறைவேற்றிக் கொள்வதற்கும், பிரயோக ரீதியான பயிற்சியினை பிரதேச ரீதியாக மற்றும் தேவையாயின் நிறுவன ரீதியாக நடாத்துவதற்கும் சாதாரண நிலைமையின் கீழ் திட்டமிடப்பட்டது.

ஆயினும் தற்போதைய கொவிட் பெருந்தொற்று நிலைமையின் கீழ் மக்களை ஒன்றுதிரட்டுதல் இடைநிறுத்தப்படல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படல் போன்ற செயற்பாடுகள் காரணமாக வழமையான முறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாதுள்ளது. ஆகவே இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான மாற்று வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென தயவாய் சுட்டிக் காட்டுகின்றேன்.

02. தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு விரும்பும் நபர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கான கொள்கை விளக்க மற்றும் பிரயோக ரீதியான பயிற்சி வழங்கப்பட வேண்டும். அதற்காக தயாரிக்கப்பட்ட ஆரம்ப பயிச்சித் திட்டத்தின் பிரதி இதனோடு இணைக்கப்பட்டுள்ளது. (ஏற்புடையவாறு திருத்தப்பட முடியும்)

03. கொள்கை விளக்க மற்றும் பிரயோக ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தியடையும் போது தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்கள் கைத்தொழிலை வெற்றிகரமாக ஆரம்பித்து நடைமுறைப்படுத்தும் ஆற்றல் தொடர்பான ஆரம்ப அறிவு மற்றும் பயிச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும். இதன் போது விசேடமாக தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி மீது தாக்கம் செலுத்தும் காரணிகள், தொழில்முயற்சி விழுமியங்கள், வெற்றிகரமான தொழில் முயற்சியாளர் ஒருவருக்குத் தேவையான திறன்கள், ஊக்குவிப்பு மற்றும் தலைமைத்துவம், தொழில் முயற்சியாண்மை சந்தர்ப்பங்களை இனம் காணல், தொழில் முயற்சியை மேம்படுத்தல், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள், தொழில் முயற்சியை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கு, கருத்திட்டப் பிரேரணைப் பத்திரம் தயாரித்தல் ஆகியன தொடர்பில் சரியான மற்றும் முறையான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. வழமையான வழிமுறைகளுக்கு அமைவாக பயிற்சி நிகழ்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் வரை பின்வரும் மாற்று வழிமுறைகள் மூலம் பயிற்சியளித்தல் நடைமுறைப்படுத்தப்படும்.

(i) நிகழ்நிலை முறை (Online) - Zoom, Microsoft Teams
(ii) காணொளி தொழில்நுட்ப முறைகள் - YouTube

இங்கு இணைய வசதிகள் அல்லது தேவையான இலத்திரனியல் கருவிகள் இல்லாத பயிலுநர்களுக்குப் பொருத்தமானவாறு மாற்று வழிமுறைகள் மூலம் பயிற்சிகளை வழங்குவதற்கான வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

05. ஆரம்ப பயிற்சித் திட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய மட்ட வளவாளர்களின் பங்களிப்புடன் 'ஸூம்' தொழில்நுட்பம், ஒளிப்பதிவு செய்யப்பட்ட காணொளிப் பதிவுகள் பரிமாற்றம், அமைச்சின் 'யூடியூப்' அலைவரிசை போன்ற தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்புடைய வசதிகளை அமைச்சின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துக்காக தொடர்புபடுத்தக் கூடிய பொருத்தமான வளவாளர்கள் பிரதேச ரீதியில் காணப்படுவார்களாயின் அது தொடர்பான விபரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக மாவட்ட அல்லது பிரதேச ரீதியில் காணப்படும் வளவாளர்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட முடியுமான பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நீங்கள் ஏற்பாடு செய்வதற்கு எதுவிதத் தடையும் இல்லை. அதற்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வளவாளர்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும்.

06. பிரயோக ரீதியான ஆரம்ப பயிற்சியை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அமைச்சினாலும் பிரதான வளவாளர்கள் ஊடாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக நிறுவனம் சார் பயிற்சி தேவைப்படும் தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மாவட்ட விதாதா உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

தொழில்நுட்ப ஒப்படைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படும் போது ஒரே விடய எல்லையுடன் தொடர்பான பிரதேச செயலாளர் பிரிவுகளில் வறையறுக்கப்பட்ட எண்ணிக்கை பயனாளிகள் காணப்படுவார்களாயின் பிரிவுகள் சிலவற்றின் தொழில்முயற்சியாளர்களை குழுவாக பயிற்றுவித்தல் மாவட்ட விதாதா உத்தியோகத்தர் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அச் சந்தர்ப்பத்தில் மாவட்ட விதாதா உத்தியோகத்தர் அப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஏற்புடைய செலவு மதிப்பீட்டைத் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சினால் இவ் ஒதுக்கீடுகள் மாவட்ட செயலாளருக்கு விடுவிக்கப்படும்.

07. உத்தேச முறைமையின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஆரம்ப பிரதான செலவுகள் அமைச்சினால் பொறுப்பேற்கப்படுவதால் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை முழுமையாக செலவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

08. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான புதிய தொழில்நுட்ப முறைகள் முதற் முதலில் பயன்படுத்தப்படுவதனால் அதன் போது உருவாகும் சவால்களை வெற்றி கொள்வதற்காக அனைவரதும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது என்பதனை நினைவுகூருவதுடன் அதற்காக விதாதா பிரிவின் உதவிப் பணிப்பாளர், செல்வி ஜயசமரா குணரத்ன (தொலைபேசி இலக்கம் 011 2331356/0117574221) அவர்களுடன் தொடர்ச்சியான தொடர்பாடலை உருவாக்குதல் பொருத்தம் ஆகும்.

## ஆரம்ப பயிற்சித் திட்டம்

1. **தொழில் முயற்சியாளர் மற்றும் தொழில் முயற்சியாண்மை**

- தொழில் முயற்சியாண்மை என்றால் என்ன?
- தொழில் முயற்சியாளர் என்பவர் யார்?
- தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகள்
- தொழில் முயற்சி ஒழுக்க விழுமியங்கள்
- வெற்றிகரமான தொழில் முயற்சியாளரிடம் இருக்க வேண்டிய திறன்கள், ஊக்குவிப்பு மற்றும் தலைமைத்துவம், ஆளுமைப் பாணி மற்றும் நடத்தை வடிவங்கள்

2. **தனிப்பட்ட மற்றும் தொழில் முயற்சியாண்மை நோக்கங்களை உருவாக்குதல் மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதற்கான படிமுறைகள்**

- தனிப்பட்ட பலம் மற்றும் பலவீனங்களை இனம்காணல்
- நேர்கணிய சிந்தனை
- மற்றவர்களைப் பற்றி அறிதல், இனம் காணல் மற்றும் உணர்திறனுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆற்றல்
- உணர்ச்சி வேகமுடைய அறிவின் ஊடாக நேர்கணிய தனிநபர் உறவுகளை கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்.
- தொழில் முயற்சிக்குப் பொருத்தமானவாறு உயர்வான செயலாற்றுகைத் தலைமைத்துவம், குழுவமைக்கப்பட்ட உற்பத்தி திறன் மற்றும் குழு ஒத்துழைப்பு

3. **கஷ்டமான சந்தர்ப்பங்களின் போது பதில்குறி தெரிவித்தல், சவால்களுக்கு மத்தியில் சளைக்காதிருத்தல், அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்**

❖ **தொழில் முயற்சியாண்மை சந்தர்ப்பங்களை இனம் காணல்**

- தொழில் முயற்சி மாதிரிகள்
- வெற்றிகரமான தொழில் முயற்சிக் கருத்தினை எவ்வாறு கண்டறிவது?
- தடைகளை புரிந்துகொள்ளல் (தனிநபர் வறையறைகள், குழுசார்ந்த தடைகள், நிறுவனம் சார் தடைகள், கைத்தொழில் மற்றும் சந்தை வறையறைகள், பொருளாதார ரீதியான தடைகள், அரசியல் ரீதியான தடைகள், சமூக ரீதியான தடைகள், தொழில்நுட்ப ரீதியான தடைகள் மற்றும் சூழல் ரீதியான தடைகள்)

4. **தொழில் முயற்சியின் தந்திரோபாயங்களை உருவாக்குதல்**

- வாடிக்கையாளர்களை இனம் காணல்
- சந்தை தேவைப்பாடுகள் மற்றும் கைத்தொழிலை புரிந்துகொள்ளல்
- போட்டித் தன்மையின் அனுகூலங்கள்
- தொழில் முயற்சியினை மேம்படுத்தல்
- சந்தையில் இடம் பிடித்தல்
- சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் - பொருள், விலை, இடம், மேம்படுத்தல் முறைகள்
- வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் தொடர்பாடல்
- தொழில் முயற்சியாண்மைக்காக இனையத்தைப் பயன்படுத்தல்

5. **வாடிக்கையாளர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல்**

- எதிர்கால வாடிக்கையாளர்களை கவர்தல்
- வாடிக்கையாளர்களைத் தக்க வைத்தல்
- வாடிக்கையாளர் திருப்தி
- வாடிக்கையாளர் அனுசரணை

❖ **மனித வள அபிவிருத்தி திட்டம்**

- மனித வளக் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிறுவனம் சார் முகாமைத்துவம் (கட்டமைப்பு, பகுப்பாய்வு மற்றும் தொழில் விபரம்)

6. **நிதி முகாமைத்துவம்**

- நிதி ஒழுங்கு
- காசுப் புத்தகம் ஒன்றைப் பேணுதல்
- கணக்குப் பதிவு மற்றும் அறிக்கைகள்
- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

7. **இதுவரை கற்றுக்கொண்ட விடயங்களின் அடிப்படையில் கருத்திட்ட யோசனைப் பத்திரத்தை தயாரித்தல்**

- அதற்கு ஏற்புடைய வரைஉருவபப்படம் மற்றும் வழிகாட்டலை வழங்குதல்

8. **பிரயோகப் பயிற்சி**

## கருத்திட்ட யோசனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான வழிகாட்டி

நீங்கள் முன்வைக்கும் கருத்திட்டம் இந்த வழிகாட்டியின் ஒழுங்குவரிசைக்கு அமைய விவரமாக தயாரிக்கப்படல் வேண்டும்.

1. **கருத்திட்டத்தின் பின்னணி**

   a. கருத்திட்டம் மூலம் யோசனை முன்வைக்கப்படும் தொழில் முயற்சி
   b. இந்த தொழில் முயற்சிக்கான யோசனை முன்வைக்கப்படுவதற்கான காரணம்
   c. தொழில் முயற்சியின் மூலம் வழங்கப்படும் தீர்வு
   d. குறுங்கால இலக்குகள்
   e. நீண்டகால இலக்குகள்
   f. தொழில் முயற்சியின் நோக்கம்

2. **தற்போதைய நிலைமை**

   a. பலம், பலவீனம், சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள்
   b. பொருளாதார ரீதியான தடைகள், பொருளாதார ரீதியான தடைகள், அரசியல் ரீதியான தடைகள், சமூக ரீதியான தடைகள், தொழில்நுட்ப ரீதியான தடைகள் மற்றும் சூழல் ரீதியான தடைகள்
   c. தற்போதைய சந்தை தேவைப்பாடுகள் மற்றும் போட்டித் தன்மையுள்ள தொழில்முயற்சிகள்.
   d. போட்டித் தன்மையின் அனுகூலம்

3. **பொருள் உற்பத்தி திட்டம்**

   a. பொழிப்பாக்கப்பட்ட உற்பத்திச் செயன்முறை (புகைப்படங்களை உள்ளடக்க முடியும்)
   b. உற்பத்தி வளங்கள் மற்றும் மூலப்பொருள்
   c. தொழில் முயற்சியின் அமைவிடம்
   d. புலமைச்சொத்து உரிமம் பெற்றிருப்பின் / பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுமாயின் அது தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட விபரம்

4. **சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

   a. இலக்கு வாடிக்கையாளர்
   b. தொழில் முயற்சியை இடவமைத்தல்
   c. சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் - பொருள், விலை, இடம் மற்றும் மேம்பாட்டு முறைகள்
   d. வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் தொடர்பாடல் திட்டமிடல்

5. **மனித வள அபிவிருத்தி திட்டம்**

   a. மனித வளத்தின் தேவைப்பாடு
   b. தாபன ரீதியிலான முகாமைத்துவம்

6. **நிதி முகாமைத்துவம்**

a. மூலதனக் கிரயம்
b. தொழிற்படு மூலதனம்
c. பொருள் ஒன்றுக்கான உற்பத்திக் கிரயம்
d. கருத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பீடு
e. கருத்திட்டத்துக்குத் தேவையான மேலதிக மூலதனம் பயனாளியால் பெற்றுக்கொள்ளப்பட்டதா?
f. அவ்வாறு ஈடுபடுத்த முடியுமான தொகை
g. அரசு மற்றும் பயனாளியால் பொறுப்பேற்கப்படும் கிரயத்தை மிஞ்சும் சந்தர்ப்பத்தில் நிதி வசதிகள் தேவைப்படுமாயின் அது தொடர்பான விபரம்

7. **இனம் காணப்பட்ட பயனாளியை தொழில் முயற்சியாளராக மாற்றுவதற்கு அமைச்சு மூலம் தெவைப்படும் பங்களிப்பு**

(உதா: தொழில்நுட்ப மற்றும் ஏனைய பயிற்சித் தேவைப்பாடுகள், இயந்திர சாதனத் தேவைப்பாடுகள், உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான தரப் பரிசோதனை அறிக்கை / தரச் சான்றிதழ், நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு, சந்தைப்படுத்தல், சந்தையினைக் கண்டறிதல், தொழில் முயற்சியாண்மை ஆற்றலை விருத்தி செய்தல்)